

புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தின் முன் – அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ‘இந்தியா’ கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டன முழக்கமிட்டனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல்காந்தி, கழகப் பொருளாளர், மக்களவைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். அப்போது அவர்கள் அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தை தங்கள் கையில் வைத்துக் கொண்டிருந்தனர்.

### அரசியல் சாசனத்திற்கு எதிராக செயல்படும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்!

## ‘இந்தியா’ கூட்டணி போராட்டம்!

புதுடெல்லி, ஜூன் 25-

அரசியல் சாசனத்திற்கு எதிராக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

18வது மக்களவையின் தற்காலிக சபாநாயகராக, தகுதிவாய்ந்த மூத்த உறுப்பினரான கொடிக்குனில் சுரேஷை ஒன்றிய பா.ஜ.க. அரசு நியமிக்கவில்லை. இந்நிலையில் மக்களவை கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. அப்போது, ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்திற்குச் சென்றனர். தொடர்ந்து, அரசியல் சாசன நடைமுறைகளுக்கு எதிராக செயல்படும் பா.ஜ.க. கூட்டணி அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில், சோனியாகாந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, கனிமொழி கருணாநிதி, டி.ஆர்.பாலு உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் கலந்துகொண்டனர்.

அப்போது, அரசியலமைப்பு சாசன புத்தகத்தை கையில் ஏந்தியபடி, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

# தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்க!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூன் 25-**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்திடக் கோரி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**



இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவித்திட இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டுமென்று கோரி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (24.6.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தனது முந்தைய கடிதத்தில் சுட்டிக் காட்டியது போன்று மீனவர்களை கைது செய்தல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் தொடர்வதால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அச்சமுதாயத்தினரிடையே மிகுந்த அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கடந்த 22.06.2024 அன்று, ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள், INDTN 10MM84, INDTN10MM88 மற்றும் INDTN10MM340 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட மூன்று இயந்திரப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**மீனவர் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்திடுக!**

எனவே, இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே விடுவிக்கப் பட்ட படகுகளை இலங்கையில் இருந்து கொண்டு வருவதற்கு மீட்புப் படகுகள் மற்றும் பணியாளர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை சந்தித்து, அவர்களுக்கு ஆறுதலும் அடிப்படைத் தேவைகளையும் வழங்கிட அனுமதி தர வேண்டுமென தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கூட்டுப் பணிக்குழுவை மீண்டும் புதுப்பித்திடு!**

மீனவர்களின் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், இதற்காக ஏற்கெனவே அமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழுவினை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துரைத்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### 18 ஆண்டுகளுக்குப்பின் கண்டதேவி கோயில் தேரோட்டம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கிராம மக்கள் நன்றி!

சென்னை, ஜூன் 25-

கண்டதேவி அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்டம் 18 ஆண்டுகளுக்கு பிறகு 21.6.2024 அன்று சிறப்பாக நடைபெற்றதையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை அப்பகுதி கிராம மக்கள் நேற்று சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிவகங்கை தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் திருக்கோயிலாகும்.

சட்டம் ஒழுங்கு மற்றும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக 2006 முதல் 2023 ஆண்டு வரை தேரோட்டம் நடைபெறவில்லை. தேர்த் திருவிழா நடத்தப்படாதது பக்தர்களிடையே ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி வந்தது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசின் சீரிய நடவடிக்கையின் காரணமாக, 18 ஆண்டுகளுக்கு பிறகு தேரோட்ட விழா சிறப்பாக கடந்த 21.6.2024 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், இலட்சக்கணக்கான மக்கள் பங்கு பெற்று மகிழ்ந்தனர். பல்லாண்டுகளுக்குப் பிறகு சீரோடும் சிறப்போடும் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை மூலம் நடத்தப்பட்ட இந்த விழா சிவகங்கை மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி இப்பகுதி மக்கள் அனைவருக்கும் பேருவகை அளித்துள்ளது.

அதனையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2024) தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், கண்டதேவி பெரியநாயகி அம்பிகா சமேத சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் திருவிழாவை முன்னிட்டு 18 ஆண்டுகளுக்குப் பிறகு 21.6.2024 அன்று தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றதையொட்டி அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உடனிருந்தார்.

### மின்னல் வேகத்தில் பட்டா!

# ‘திராவிட மாடல்’ அரசின் வருவாய்த் துறை சாதனையில் ஒரு புதிய மைல் கல்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு !

சென்னை, ஜூன் 25 -

மின்னல் வேகத்தில் பட்டா கிடைக்க எல்லோரும் அதிசயப்படும் வகையிலான முறையை கொண்டுவர அரசு முடிவெடுத்துள்ளது. இது ‘திராவிட மாடல்’ அரசின் வருவாய்த்துறை சாதனையில் ‘ஒரு புதிய மைல் கல்’ என ‘தினத்தந்தி’ நாளேடு பாராட்டுத் தெரிவித்துள்ளது.


தலையங்கம்
தினத்தந்தி
24.6.2024 (திங்கட்கிழமை)
ஒரு நிமிடத்தில் பட்டா!

அது வருமாறு:-

தமிழக அரசுத் துறைகளில், வருவாய்த்துறை மக்களோடு நேரடி தொடர்பில் உள்ள துறை. மனிதனுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை வருவாய்த் துறை அளிக்கும் சான்றிதழ்கள் மிகவும் இன்றியமையாதது. இதுமட்டுமல்லாமல், சாதி சான்றிதழ். வாரிசு உரிமைச் சான்றிதழ், நில உரிமைச் சான்றிதழ்என்றுவருவாய்த்துறை வழங்கும் சான்றிதழ்தான் அனைத்து வாழ்வுரிமைகளுக்கும் அச்சாணியாக விளங்குகிறது. அரசின் எல்லா திட்டங்களையும் பெற இந்த சான்றிதழ்களே அடிப்படை. வீடு, மனை, விளை நிலம், தரிசு நிலம் என எதுவென்றாலும் பட்டா என்பது மிக மிக முக்கியமானதாகும். நாம் கையில் வைத்திருக்கும் பத்திரம் என்பது இரு தனி நபர்களுக்கு இடையே நடந்த பரிமாற்ற ஆவணம் தான். ஆனால், பட்டா என்பது அந்த சொத்துக்கான சட்ட ரீதியிலான உரிமையை தனி நபர் அல்லது நிறுவனத்துக்கு வருவாய்த் துறை வழங்கும் ஆவணமாகும். அதுபோல, சிட்டா என்பது சொத்து அமைந்துள்ள பகுதி, அளவு. உரிமையாளர் முதலான விவரங்களை உள்ளடக்கிய ஆவணமாகும். கடந்த 2015ம் ஆண்டில் இருந்து இந்த இரு ஆவணங்களும் தமிழ்நாடு நிலம் தொடர்பான ஆவணங்களில் பட்டா சிட்டா என்ற ஒரே ஆவணமாக இணைக்கப்பட்டுள்ளது.

அரசால் வழங்கப்படும் இந்த ஆவணம் உரிமைகளின் பதிவேடு என்றும் அழைக்கப்படுகிறது. பட்டா எண். மாவட்டம். தாலுகா, கிராமம் ஆகியவற்றின் பெயர். சர்வே எண் மற்றும் உட்பிரிவு. அந்த நிலம் நன்செய் நிலமா?, புன்செய் நிலமா?. நிலம் அமைந்துள்ள பகுதி மற்றும் தீர்வை விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதே பட்டாவாகும். ஆக மொத்தத்தில், ஒரு சொத்தின் உரிமையை நிலைநாட்டும் முதல் ஆவணம் பட்டாதான். அந்த வகையில், சொத்து உரிமையாளர்கள் ஒவ்வொருவரிடமும் பட்டா கையில் இருக்கவேண்டும்.

முன்பெல்லாம் பட்டாவுக்காக கிராம நிர்வாக அலுவலர் மூலம் தாசில்தாருக்கு விண்ணப்பித்தால் அலுவலக நடைமுறைகள் காரணமாக அந்த விண்ணப்பம் பலர் கைகளுக்கு சுற்றி சுற்றி சென்று பட்டா கிடைக்க பல நாட்கள் ஆகும். இந்த நடைமுறை சிக்கலுக்கு பயந்தே பலர் பட்டா வாங்குவதில்லை. இப்போது அரசு இது போன்ற சேவைகள் மக்களுக்கு விரைவாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் லஞ்சம் இல்லாமலும் கிடைப்பதற்காக ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்ற முறையைக் கொண்டு வந்து இருந்தது. இதுமட்டுமல்லாமல் மின்னல் வேகத்தில் பட்டா கிடைக்க. எல்லோரும் அதிசயப்படும் வகையிலான முறையை கொண்டுவர அரசு இப்போது முடிவெடுத்துள்ளது.

இனி பட்டாவுக்காக விண்ணப்பிக்க வேண்டிய தேவையே இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு பத்திரம் பதிவு செய்யப்பட்ட உடன் அடுத்த நிமிடத்தில் பட்டாவும் தானாகவே பதிவாகி நில உரிமையாளர் கையில் கிடைத்துவிடும். இது வருவாய்த்துறை சாதனையில் ஒரு புதிய மைல் கல். விரைவில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு விடும். சில ஊர்களில் சோதனை அடிப்படையில் ஒரு நிமிடத்தில் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இது போல, சொத்து வைத்து இருப்பவர்கள் ஏற்கனவே பட்டாவுக்காக விண்ணப்பித்திருந்த நிலையில். முதலில் விண்ணப்பம் செய்தவர்களுக்கு முன்னரிமை என்ற அடிப்படையில், உட்பிரிவு இல்லாத பட்டாவுக்கு 17 நாட்களிலும் உட்பிரிவு உள்ள பட்டாக்களுக்கு 300 நாட்களிலும் பட்டா வழங்கவேண்டும் என்று அரசு உத்தரவு வர இருக்கிறது. இந்த புதிய நடைமுறையை அதிகாரிகள் முறையாக பின்பற்றினால் ‘பட்டா’ பெற இது வரை மக்கள் சந்தித்த பிரச்சினைகளுக்கு இனி ‘டாட்டா’ காட்டிவிடலாம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் பல்வேறு திட்டங்கள் அறிவிப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மீனவர்கள் நன்றி - பாராட்டு!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜூன் 25-

“மீனவர்கள் நலனில் மிகுந்த அக்கறையுடன் பல்வேறு திட்டங்களை பட்ஜெட் மானியக் கோரிக்கையில் அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மீன்வளத்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் கழக மீனவர் அணி சார்பில் நன்றி தெரிவித்து கழக மீனவர் அணி செயலாளர் அ. ஜோசப் ஸ்டாலின் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, 2024 2025-ஆம் ஆண்டு மேற்கொள்ளவுள்ள திட்டங்களையும் அறிவித்துள்ளது. சட்டப்பேரவையில், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் 23 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்.

**மீன் இறங்கு தளம்!**

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு பாரதியார் நகர் கடற்கரை கிராமத்தில், மீனவர்கள் பிடித்து வரும் மீன்களை சுகாதாரமான முறையில் ஏலம் விடு வதற்கும், மீன்பிடி வலைகளை சரி செய்வதற்கும், ரூ.5 கோடி செலவில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என அறிவித்திருக்கிறார். இதேபோல் தமிழ்நாடு முழுவதும் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, தூத்துக்குடி, நாகப்பட்டினம், விழுப்புரம் என தேவைப்படும் இடங்களில் எல்லாம் புதிய மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்களைத் தரமாகவும், சுகாதாரமான முறையிலும் வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்ல ஏதுவாக குளிர் காப்பிடப்பட்ட வாகனங்கள் வாங்குவதற்கு 14 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்களின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு, அதற்காக இன்னும் கூடுதலாக பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, ஆபத்து நேரங்களில் மீனவர்கள் அருகிலுள்ள மீன்பிடி படகுகளிலுள்ள மீனவர் களையோ, கரையில் உள்ளவர்களையோ தொடர்பு கொள்வதற்காக 2 கோடி ரூபாய் மதிப்பில் 200 ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு செயற்கைக் கோள் தொலைபேசிகள் வாங்கிட 40 விழுக்காடு மானியம் வழங்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், பெரியநாயகி தெரு மற்றும் பள்ளம்துறை மீன் இறங்கு தளங்களில் தூண்டில் வளைவு நீட்டிப்பு பணிகள் ரூ. 52 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மட்டுமல்லாமல் நீர்த்தேக்கங்கள், சிறிய நீர்ப்பாசன குளங்களில் மீன் பிடிப்பவர்களுக்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்காக பரிசல் மற்றும் மீன்பிடி வலை போன்ற உபகரணங்களை வழங்கிட ஏதுவாக ஒரு கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் மீன்பிடிப்பு திறன் அதிகரிப்பதுடன், வருவாயும் உயர வழிவகை செய்யப்படவுள்ளது.

அதேபோல் கிராமப் புறங்களில் மீன் உற்பத்தியினை அதிகரித்திட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்காக ரூ.75 லட்சம் செலவில் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் திட்டங்களை அறிவித்ததற்காக கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணனுக்கும் கழக மீனவரணி சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தென்காசி மாவட்டம் வி.கே. புதூரில் அமைந்துள்ள நவநீதகிருஷ்ண சுவாமி கோயில் நூற்றாண்டுகளை கடந்து பழமை வாய்ந்த கோவிலாகும். இத்திருக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தி 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனவே நிதி ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டு நவநீதகிருஷ்ணசுவாமி கோவிலில் குடமுழுக்கு நடத்திடக்கோரியும், பாப்பான்குளம் அழகம்மாள் சமேத கருத்தீஸ்வரர் திருக்கோவில் திருப்பணி செய்திடக் கோரி பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கோரிக்கை மனு அளித்துள்ளார். உடன் சேசுராஜன், அழகுசுந்தரம், மகேஷ்மாயவன், நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் உள்பட கழகத்தினர் பலர் இருந்தனர்.